
பிரதான தலைமை செய்தி, ஜூன் 2017

தலைவர் தாமஸ் எஸ். மான்சன்



# பணியாற்ற அழைக்கப்படுகிறீர்கள்

இங்கிலாந்துக்கு ஒரு ஊழியக்காரராக “இரட்சிப்பின் கதவைத் திறக்க” மூப்பர் ஹீபர் சி. கிம்பலை (1801-68) தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித் அழைத்தபோது, போதாமையின் உணர்ச்சிகளால் மூப்பர் கிம்பல் மேற்கொள்ளப்பட்டார்.

அவர் எழுதினார், “கர்த்தாவே, நான் திக்குவாயன், அப்படிப்பட்ட பணிக்கு முற்றிலும் தகுதியற்றவன்.”

எனினும் மூப்பர் கிம்பல் அழைப்பை ஏற்று, சொன்னார்: “இப்பிரச்சினைகள் என்னை கடமையின் பாதையிலிருந்து தடுக்கவில்லை. நான் பரலோக பிதாவின் சித்தத்தை புரிந்துகொண்ட கணத்திலேயே, அவரது சர்வ வல்ல வல்லமையால் அவர் என்னை ஆதரிப்பார், எனக்குத் தேவைப்பட்ட எல்லாத் தகுதியுடனும் என்னைத் தரிப்பிப்பார் என நம்பி, அனைத்துப் பிரச்சினைகளையும் தாண்டிச் செல்ல ஒரு தீர்மானத்தை உணர்ந்தேன்.”[1]

முழுநேர ஊழியச் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ள என் இளம் சகோதர சகோதரிகளே, மூப்பர் கிம்பலைப் போல “தேவனுக்கு ஊழியம் செய்ய உங்களுக்கு வாஞ்சை இருப்பதாலும்,” (கோ.உ 4:3) நீங்கள் ஆயத்தமாயும் தகுதியாயும் இருப்பதாலும் நீங்கள் இப்பணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

மூத்த தம்பதியினரே, இதே காரணங்களுக்காகவே நீங்களும் இப்பணிக்கு அழைக்கபட்டிருக்கிறீர்கள். எனினும் நீங்கள் சேவை செய்யும் வாஞ்சையோடு வருவது மட்டுமல்ல, சத்தியத்தைத் தேடுகிற அவரது குமாரர்கள் மற்றும் குமாரத்திகளின் இருதயங்களைத் தொட உங்கள் பரலோக பிதா பயன்படுத்தக்கூடிய தியாகம், அன்பு மற்றும் அனுபவங்களின் பருவங்களில் பெற்ற ஞானத்தையும் கொண்டு வருகிறீர்கள். பிறருக்கு சேவை செய்து, நாம் அவருக்கு சேவை செய்யும் வரை, நாம் ஒருபோதும் உண்மையாகவே நேசிக்க முடியாது என நீங்கள் கற்றிருக்கிறீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஊழியக்காரர்களாக சேவை செய்யும் உங்கள் வாஞ்சையுடன், விசுவாசத்தையும், உறுதிப்பாட்டையும், தைரியத்தையும், தன்னம்பிக்கையையும், தீர்மானத்தையும் மன உறுதியையும், துணிச்சலையும், அர்ப்பணிப்பையும் சேர்ப்பீர்கள். அர்ப்பணிப்புடைய ஊழியக்காரர்கள் ஊழியக்களத்தில் அற்புதங்களைக் கொண்டு வர முடியும்.

தலைவர் ஜான் டெய்லர் (1808-87) ஊழியக்காரர்களுக்குத் தேவையான தன்மைகளை இவ்விதமாக சுருக்கமாகச் சொன்னார்: “இச்சுவிசேஷ செய்தியைத் தாங்கிச் செல்லும் விதமான மனுஷர்களாக [பெண்களும் தம்பதியரும்] நாம் விரும்புபவர்கள், தேவனில் விசுவாசமிக்க மனுஷர்கள்; தங்கள் மதத்தில் விசுவாசமிக்க மனுஷர்கள்; தங்கள் ஆசாரியத்துவத்தை கனம்

பண்ணுகிற மனுஷர்கள்; தேவன் நம்பிக்கை வைத்துள்ள மனுஷர்கள். முழுவதும் பரிசுத்த ஆவியும் தேவ வல்லமையும் நிரம்பிய மனுஷர்கள், மாண்பும், உத்தமமும், நற்குணமும், பரிசுத்தமும் உள்ள மனுஷர்கள்.”2

கர்த்தர் அறிவித்தார்,

“ஏனெனில் இதோ வயல் அறுவடைக்குத் தயாராக இருக்கிறது. இதோ தன் முழு பலத்தோடும் அரிவாளை நீட்டுகிறவன், தான் அழிந்துபோகாதபடிக்கு பொக்கிஷத்தில் சேர்க்கிறான், ஆனால் தன் ஆத்துமாவுக்கு இரட்சிப்பைக் கொண்டுவருகிறான்;

“தேவனுடைய மகிமைக்காக மட்டுமே கண்ணோக்கமாய் விசுவாசம், நம்பிக்கை, தயாளம் மற்றும் அன்புடன் இருப்பவன் இப்பணிக்கு தகுதிப்படுகிறான்.” “கோ.உ 4:4-5)

உங்களுடைய அழைப்பு உணர்த்துதலால் வந்திருக்கிறது. தேவன் தாம் அழைப்பவர்களைத் தகுதிப்படுத்துகிறார். கர்த்தரின் திராட்சைத் தோட்டத்தில் நீங்கள் ஜெபத்துடன் பிரயாசப்படும்போது, நீங்கள் பரலோக உதவியைப் பெறுவீர்கள்.

கோட்பாடும் உடன்படிக்கைகளிலும் உள்ளதுபோல, இந்த ஊழியக்காலத்தின் தொடக்கத்தில் ஊழியக்காரர்களுக்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம் உங்களுக்குரியதாயிருக்கும். “நான் உங்கள் முகத்துக்கு முன்பதாகப் போவேன், உங்களது வலது பாரிசத்திலும் இடது பாரிசத்திலும் இருப்பேன், என் ஆவி உங்கள் இருதயங்களிலிருக்கும். உங்களைத் தாங்க என்னுடைய தூதர்கள் உங்களைச் சுற்றிலும் இருப்பார்கள்” (கோ.உ 84:88).

நீங்கள் சேவை செய்யும்போது, நீங்கள் அதிகமான நினைவுகளையும் நண்பர்களையும் பெறுவீர்கள். ஊழியக்களத்தை விட மிகவும் உதாரத்துவமான அறுவடை கொடுக்கிற எந்த வயலையும் எனக்குத் தெரியாது.

இப்போது ஊழியக்களத்தில் தங்களுக்கு நியமிக்கப்பட்ட காலத்தை எக்காரணத்திலாவது முடிக்க முடியாத மூப்பர்களுக்கும், சகோதரிகளுக்கும், தம்பதிகளுக்கும் ஒரு வார்த்தை, கர்த்தர் உங்களை நேசிக்கிறார். உங்கள் தியாகத்தை அவர் பாராட்டுகிறார். உங்கள் ஏமாற்றத்தை அவர் அறிவார். நீங்கள் செய்ய வேண்டிய ஒரு பணியை அவர் இன்னமும் வைத்திருக்கிறார் என அறியுங்கள். வேறுவிதமாக சாத்தான் சொல்ல அனுமதிக்காதீர்கள். கவலைப்படாதிருங்கள், அதைரியமடையாதிருங்கள், விரக்தியடையாதிருங்கள்.

நான் சபையை வழிநடத்த அழைக்கப்பட்ட கொஞ்ச நாட்களில் பொது மாநாட்டில் நான் சொன்னேன், “பயப்படாதிருங்கள். உற்சாகமாயிருங்கள். உங்கள் எதிர்காலம் உங்கள் விசுவாசத்தைப் போல பிரகாசமாயிருக்கிறது.”3 அந்த வாக்குத்தத்தம் இன்னும் உங்களுக்கு உண்மையானதாயிருக்கிறது. ஆகவே விசுவாசத்தை இழக்காதீர்கள். ஏனெனில் கர்த்தர் உங்கள் மீது விசுவாசத்தை இழக்கவில்லை. உங்கள் உடன்படிக்கைகளை காத்துக்கொண்டு முன்னேறுங்கள்.

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் உலகுக்குத் தேவைப்படுகிறது. ஊழிய இருதயத்தோடு-- நீங்கள் எங்கு சேவைசெய்தாலும் தன் பரிசுத்தவான்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

## குறிப்புகள்

1. Heber C. Kimball, in Orson F. Whitney, *Life of Heber C. Kimball*,3rd ed. (1967), 104.
2. *Teachings of Presidents of the Church: John Taylor* (2001), 73.
3. Thomas S. Monson, “Be of Good Cheer,” *Liahona*, May 2009, 92.

## இச்செய்தியிலிருந்து கற்பித்தல்

நாம் முழுநேர ஊழியக்காரர்களாக சேவை செய்தாலும், செய்யாவிட்டாலும், நம் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளவும், நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு சேவை செய்யவும் சந்தர்ப்பம் உண்டு. பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தின் மூப்பர் டாலின் எச். ஓக்ஸ் பேசிய “Sharing the Restored Gospel” (லியஹோனா, நவ. 2016, 57).போன்ற இத்தலைப்பிலுள்ள அண்மை பொது மாநாட்டுச் செய்தியை இத்துடன் சேர்ப்பதைக் கருத்தில் கொள்ளவும். நீங்கள் கற்பிப்பவர்களுடன் “தேவன் அழைப்பவர்களை அவர் தகுதிப்படுத்துகிறார்” என்கிற சொற்றொடரை நீங்கள் கலந்துரையாடலாம். ஊழியப் பணியிலும் அவர்களது அழைப்பிலும் தேவன் அவர்களை ஆதரித்ததை அவர்கள் எப்படி உணர்ந்தார்கள்? தங்கள் குடும்பத்தாருடனும், நண்பர்களுடனும், அக்கம்பக்கத்தாருடனும், அவர்கள் சுவிசேஷத்தை எப்படிப் பகிர்ந்துகொள்வது என பெலனுக்காகவும் உணர்த்துதலுக்காகவும் அறிய ஜெபிக்குமாறு நீங்கள் கற்பிப்பவர்களை அழைக்கலாம்.

## வாலிபர்

### பெயரட்டை இல்லாத ஊழியக்காரர்

கிர்ஸ்டி அரவே

பள்ளியில் பாடத்தில் எதிர்கருத்துக்களை பகிர்பவர்களை பயமுறுத்தக்கூடிய விதமான ஆளுமை உடைய ஒரு ஆசிரியர் உண்டு. ஒரு நாள் பிற்காலப் பரிசுத்தவான் ஊழியக்காரர்களைப் பற்றிய பேச்சு வந்தது. அவரது கேள்விகளுக்கு நான் பதிலளித்திருக்க முடியும் என்று எனக்குத் தெரியும், ஆனால் கூடாது என்பது போல உணர்ந்தேன். ஆகவே அச்சமயத்துக்கு அவரைத் திருப்திபடுத்த போதுமானதைச் சொன்னேன்.

அடுத்த சில வாரங்களுக்கு எங்கள் உரையாடல் பற்றி நினைப்பதை என்னால் நிறுத்த முடியவில்லை. கடைசியாக ஊழியப் பணி பற்றி அடிக்குறியிடப்பட்ட சில வாசகங்களுடைய மார்மன் புத்தகத்தை அவருக்குக் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனை வந்தது. அச்சிந்தனை என்னை பயமுறுத்தியது, ஆனால் நிலைத்திருந்தது. நான் பின்பற்ற வேண்டிய தூண்டுதல் என நான் அறிந்தேன்.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்குப் பின்பு, மார்மன் புத்தகத்தை ஆயத்தப்படுத்தினேன். நாள் முழுவதும் அப்புத்தகம் எனது பையில் ஒரு துவாரத்தை உண்டாக்குவது போல உணர்ந்தேன். நான் குளிர்கால விடுமுறைக்கு செல்வதற்கு முன் அதை அவரிடம் கொடுக்க ஆன மூன்று விநாடிகள் எனது வாழ்க்கையின் பயங்கர தருணம்.

திரும்பிவந்த முதல் நாளில், நான் அவரது வகுப்பைக் கடந்து போனேன், ஆனால் உள்ளே போகப் பயப்பட்டேன். பின்பு அவர் என்னை அழைப்பதைக் கேட்டேன். அவர் என்னிடம் ஒரு அட்டையைக் கொடுத்தார். வராண்டாவில் அதை நான் படித்தேன். நான் குறித்திருந்த பாகங்களை அவர் விரிவாக வாசித்ததாகவும், என் விசுவாசத்துக்குப் பின்னால் சில காரணங்கள் இருப்பதை காண ஆரம்பித்திருப்பதாகவும் எழுதியிருந்தார்.

இப்போது நான் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள மகிழ்கிறேன், விரைவிலேயே ஊழியத்தில் பரலோக பிதாவுக்கு சேவை செய்யவும் கூட மகிழ்ச்சியடைகிறேன்.

© 2017 எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அஜநால் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம் 6/16. மொழிபெயர்ப்பு அங்கீகாரம் 6/16. 97926 418ன் மொழிபெயர்ப்பு

# உடன்படிக்கைகளைக் காத்துக்கொள்வதன் மூலம் ஆசாரியத்துவ வல்லமை

விசுவாசம் குடும்பம் நிவாரணம்

ஜெபத்துடன் இச்செய்தியைப் படித்து எதைப் பகிர்ந்துகொள்வது என்ற உணர்த்துதலுக்காக நாடவும். ஒத்தாசைச் சங்கத்தின் நோக்கத்தைப் புரிந்துகொள்வது, தேவ குமாத்திகளை எப்படி நித்திய ஜீவனின் ஆசீர்வாதங்களுக்கு ஆயத்தப்படுத்தும்?

"நமது சூழ்நிலை எதுவாயிருந்தாலும், 'ஆசாரியத்துவ வல்லமையின் பெலனால் ஆசீர்வதிக்கப்பட்டு', நாம் ஒவ்வொரு மணி நேரத்தையும் வாழலாம் என்பதே அனைவருக்கும் எனது செய்தியாகும்," என பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தின் மூப்பர் நீல் எல். ஆண்டர்சன் சொன்னார்.

"...ஆசாரியத்துவ நியமங்களில் நீங்கள் தகுதியுடன் பங்கேற்கும்போது, கர்த்தர் உங்களுக்கு அதிக பெலனையும், சமாதானத்தையும், பார்வையையும் கொடுப்பார். உங்கள் சூழ்நிலை எதுவாயிருந்தாலும் உங்கள் வீடு 'ஆசாரியத்துவ வல்லமையின் பெலத்தால் ஆசீர்வதிக்கப்படும்.'"[1]

நாம் எவ்வாறு ஆசாரியத்துவ வல்லமையை நமது வாழ்க்கையில் கொண்டு வருகிறோம்? பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தின் மூப்பர் எம். ரசல் பல்லார்ட் நமக்கு நினைவூட்டுகிறார், "ஞானஸ்நானத் தண்ணீரில் இறங்கி, தொடர்ந்து கர்த்தரின் வீட்டில் தரிப்பித்தலைப் பெற்றவர்கள் அதிகமான அற்புதமான ஆசீர்வாதங்களுக்கு தகுதியானவர்கள். தரிப்பித்தல் உண்மையாகவே வல்லமையின் வரம்." நமது பரலோக பிதா தமது வல்லமையுடன் பெருந்தன்மையுடையவர். ஆண்களும் பெண்களும் ஆலயத்தில் "ஒரே வல்லமையால் தரிப்பிக்கப்பட்டிருக்கின்றனர்," "அதன் அர்த்தம் ஆசாரியத்துவ வல்லமையே"[2] என நமக்கு நினைவூட்டுகிறார்.

லிண்டா கே. பர்ட்டன் ஒத்தாசைச் சங்க பொதுத்தலைவர் சொன்னார், "நமது குடும்பங்களிலும் வீடுகளிலும் பெற்றிருக்க விரும்புவது ஆசாரியத்துவ வல்லமையாயிருப்பதால், நமது வாழ்க்கையில் அந்த வல்லமையைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும். ஆசாரியத்துவ வல்லமை பெற்றிருக்க தனிப்பட்ட நீதி முக்கியமாகும்."[3]

"நாம் கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, நமக்குப் போதிக்குமாறு அவரிடம் கேட்கும்போது, *அவரது* வல்லமையை *நாம்* அடைவதை எப்படி அதிகரிப்பது என அவர் நமக்குக் காட்டுவார்." என தலைவர் ரசல் எம். நெல்சன், பன்னிரு அப்போஸ்தலர் குழும தலைவர் சொன்னார்.[4]

## கூடுதல் வசனங்களும் தகவல்களும்

1 நெப்பி 14:14; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 121:36; 132:20; reliefsociety.lds.org

## குறிப்புகள்

1. Neil L. Andersen, "Power in the Priesthood," *Liahona,* Nov. 2013, 92, 95.
2. M. Russell Ballard, "Men and Women and Priesthood Power," *Liahona,* Sept. 2014, 36.
3. Linda K. Burton, "Priesthood Power—Available to All," *Liahona,* June 2014, 21.
4. Russell M. Nelson, "The Price of Priesthood Power," *Liahona,* May 2016, 69.

### இதைக் கருத்தில் கொள்ளவும்

நமது உடன்படிக்கைகளைக் காத்துக் கொள்வது எப்படி ஆசாரியத்துவ வல்லமையால் நம்மை ஆசீர்வதிக்கிறது?

© 2017 எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளது. அஐநால் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம் 6/16. மொழிபெயர்ப்பு அங்கீகாரம் 6/16. 97926 418ன் மொழிபெயர்ப்பு